மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17ம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்.02/2022
உள்
அசல் வழக்கு எண்.69/2020
-------------

1. சரவணன்
2. சுப்புலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சரஸ்வதி
2. அறம்
3. கணபதி
4. தனலட்சுமி
5. மரகதம்
6. லோகமுத்து கிருஷ்ணன்
7. அருள்ஜோதி
8. அருள் சக்தி
9. அருள் பிரகாஷ்
10. அருள்நிறைமதி
11. அய்யாத்துரை
12. பழனிக்குமார்
13. மாடத்தி
14. கணேசன்
15. மகாலட்சுமி
16. சக்கணன்
17. தங்கமாரி ... 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 17 பிரதிவாதிகள்

18. நென்மேனி கூட்டுறவு
விவசாய வங்கி அதன்
தலைவர் மூலம் ... 18ம் எதிர்மனுதாரர்/உத்தேச 18ம் பிரதிவாதி

இந்த மனு 07.12.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 10.03.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/

வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.முனீஸ்வரன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 7 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.செந்தாமரைக்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 14 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 18ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.முரளி அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 1 முதல் 5, 12, 13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 16, 17 மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுவை ஏற்று மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி வழங்கி உத்தரிவிடக்கோரி 07.12.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

அசல் வழக்கு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கண்ட உத்தேச 18ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 18ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டி இ.ம.எண்.01/2022 என்ற மனுவை தாக்கல் செய்து, மேற்படி மனு கடந்த 27.11.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்விளைவாக வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே, வழக்குரையில் சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள. மனு மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித ஆட்சேபணைகளும் இருக்கப்போவதில்லை. மனுவை

அனுமதிக்காது போனால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

## <u>3). 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>

மனுதாரர்கள் இ.ம.எண்.01/2022ல் 18ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரியும், உயில் குறித்து 7ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது தெரிந்து கொண்டதாகவும் மட்டும் கூறியுள்ளார். அந்த உயில் குறித்து எந்த விளக்கமும் தெரிவிக்கவில்லை. ஆனால் தாவா சீர்திருத்தம் செய்யக்கோரும் மனுவில் 4ம் இலக்கச்சொத்தை 03.01.1997ம் தேதி 7ம் பிரதிவாதிக்கு மீனம்மாள் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், அது ஆவண எண்.02/1997 என்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த உயில் ஆவணத்தில் வாதிகள் தகப்பனார் தருமலிங்கம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்று கூறுவது உண்மையில்லை என்று கூறியுள்ளார். மேற்படி உயில் ஆவணத்தை பொய்பித்தலுக்கோ, ரத்து செய்யவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல இ.ம.எண்.01/2022ல் மேற்படி உயில் மோசடியானது, இல்லாநிலையது என்று தெரிவிக்க கிடையாது. ஏற்கனவே நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள இ.ம.எண்.01/2022ல் தெரிவிக்காத சங்கதிகளை தாவா மனுவில் புதியதாக புகுத்தி தாவா மனு தாக்கல் செய்துள்ளனர். அதனால் தாவா மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

## <u>4). 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 8 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்:-</u>

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை உண்மையில்லை என மறுக்கிறார்கள்.

மனுதாரர்களால் கோரப்பட்டுள்ள சீர்திருத்தம் அனுமதிக்கப்படும்பட்சத்தில் வழக்கின் தன்மை மாறி புதுவிதமான வழக்குமூலம் ஏற்படும். 2வது பாகப்பிரிவினை ஏற்புடையதல்ல. 7 முதல் 11 எதிர்மனுதாரர்களுக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வங்கியில் தாவா சொத்துக்கான ஆவணம் அடமானத்தில் இருந்தபோது 2004ம் ஆண்டு இறந்த மாயக்காளின் பெயர் பட்டாவில் மோசடியாக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**<u>8). தீர்வு:-</u>**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. இந்த வழக்கானது வாதிகள் தரப்பில் விளம்புகை பரிகாரம் மற்றும் பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் மனுவை ஏற்று மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி வழங்கி உத்தரிவிடக்கோரி 07.12.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். எதிர்மனுதாரர்களால் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இதர விபரங்கள் குறித்த சங்கதிகளை வழக்கு விசாரணையின் போது மட்டுமே முடிவு

செய்ய முடியும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுவை ஏற்று மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி வழங்கி உத்தரிவிடக்கோரி *07.12.2022*ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு *2023*ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் *17*ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.